# 11

### சபை:

# சபை நாமகரணத்துவமாய் உள்ளதா?

## சொற்றொடர் விளக்கப்பட்டு படிக்கப்படுதல்

1. ***"நாமகரணத்துவம்" என்று அர்த்தப்படுத்தப்படுவது என்ன?***
   *அ. நாமகரணத்துவத்தின் செயல்பாடுகள், அல்லது பெயரிடுதல்.*
   *ஆ. ஒரே வித பெயரால் அழைக்கப்படும் தனிநபர்களின் பிரிவு அல்லது சமூகம்; மதக்குழு; கிறிஸ்தவர்களின் நாமகரணக் கூட்டம் என்ற வகையில்.*
   *இ. எந்த ஒரு குழுவும் நாமகரணத்துவப் படுத்தப்படும் அல்லது வடிவமைக்கப்படும் அந்தக் கருத்து; ஒரு பெயர், குறிப்புப் பெயர், அல்லது இயற்பெயர்; சிறப்பாக, ஒரே வகையான தனிநபர்களின் பிரிவுக்குள்ள ஒரு பொதுப் பெயர் (வெப்ஸ்ட்டர் அகராதி).*
2. ***பல்வேறு நாமகரணக் கூட்டங்கள் எப்பொழுது நாமகரணத்துவமாக்க-பெயரிட - ப்பட்டன?***
   ***அவை எப்பொழுது நிறுவனமாக்கப்பட்டன?***
   *இவை யாவும் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்தே இவ்வாறு ஆக்கப்பட்டன.*
3. ***நாமகரணத்துவம் என்பது மத உலகை எவ்வாறு பிரிக்கின்றது என்று காண்பிக்கவும் (1 கொரி. 1:12, 13).***

## நாமகரணத்துவத்தின் தோற்றம்

1. ***இதன் தோற்றத்திற்கான ஆதார மூலங்களில் ஒன்றைக் குறிப்பிடவும்.***
   *அரசு முறையின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை தேவையில்லாமல் வலியுறுத்துவதினால். உதாரணம்: பிரிஸ்பிட்டேரியன் சபை யார் என்பவர்கள் தங்கள் சபையின் பெயரை பிரிஸ்பிட்டர்கள் அல்லது மூப்பர்களால் ஆளப்படுதல் என்ற அர்த்தத்தில் உள்ள presbuteros என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து பெறுகின்றனர்.*
2. ***நாமகரணத்துவத்தின் மற்றுமொரு ஆதாரமூலத்தைக் குறிப்பிடவும்.***
   *குறிப்பிட்ட (சில) போதனைகளுக்குத் தேவையற்ற அளவில் வலியுறுத்தம் கொடுப்பதால்: உதாரணம்: பேப்திஸ்துகள்,*

baptism (ஞானஸ்நானம்) என்பதிலிருந்து; ஜுலியிஷ்ஜளவிவி, பரிசுத்த தன்மை என்பதிலிருந்து; ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர்கள், ஓய்வு நாளையும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் குறிப்பிடுவதிலிருந்து; பெந்தெகொஸ்துகள், பெந்தெகொஸ்தேயன்று நடந்த நிகழ்ச்சிகளுக்கு சிறப்புக் கவனம் கொடுப்பதிலிருந்து.

3. **நாமகரணத்துவத்தின் இன்னொரு ஆதார மூலத்தைக் குறிப்பிடவும்.** தனிச் சிறப்புள்ள மனிதர்களுக்கு அநாவசியமாக (அதிக) மதிப்பளித்தல். உதாரணம்: லுத்தரன்கள் என்பவர்கள் மார்ட்டின் லுத்தரில் இருந்து வந்தவர்கள்; வெஸ்லியர்கள் என்பவர்கள் வெஸ்லியில் இருந்து வந்தவர்கள்; கால்வினிஸம் என்பது ஜான் கால்வினில் இருந்து வந்தது.
4. **நாமகரணத்துவத்தின் வேறொரு ஆதார மூலத்தைக் குறிப்பிடவும்.** இடம் அல்லது (நாட்டின்) எல்லைக் கோடுகள். உதாரணங்கள்: வடக்கு மற்றும் தெற்கு பேப்திஸ்துகள்; வடக்கு மற்றும் தெற்கு மெத்தடிஸ்டுகள்; கும்பர்லேன்டு பிரிஸ்பிட்டர்கள்; இங்கிலாந்து சபை; இலங்கை மற்றும் இந்திய பெந்தெகொஸ்துகள் (CPM & IPM).

## ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயங்கள்

1. ***கர்த்தருடைய சபையானது மேற்கூறப்பட்ட ஆதார மூலங்களில் எதிலிருந்தாவது தோன்றியதா? புதியஏற்பாட்டின்சபைஎன்பதுநாமகரணத்துவமானதாகஇருக்கமுடியுமா?***
2. ***சபையை நிலைநாட்டியவர் யார் (மத். 16:18)?***
3. ***சபையின் தலைவர் யார் (எபே. 1:21, 22; கொலோ. 1:18)?***
4. ***மனிதர்களைப் பின்பற்றுபவர்களைப் பவுல் எவ்வாறு கண்டனம் செய்தார் (1 கொரி. 1:10-13)?***
5. ***சபையானது எந்தச் சொற்பதங்களால் விளக்கியுரைக்கப்பட்டது (மத். 16:18; 1 கொரி. 1:2; 1 தீமோ. 3:15; கொலோ. 1:18; அப். 20:28; எபி. 12:23; ரோமர் 16:16)?***
6. ***பவுல் சிலரை "மாம்சத்துக்குரியவர்கள்" என்று குறிப்பிட்டது ஏன் (1 கொரி. 3:3, 4)? என்றால், இப்படிப்பட்ட யாவற்றையும் குறித்துக் கிறிஸ்தவர்களின் எண்ணப்போக்கு எவ்வாறு இருக்க வேண்டும் (கொலோ. 2:21, 22)?***
7. ***மனிதர்களைப் பின்பற்றுபவர்களை இயேசு எவ்வாறு கண்டனம் செய்தார் (மத். 15:9, 13)?***
8. ***ஒருவர் நாமகரணத்துவமானவராவது எவ்வாறு? உதாரணங்கள் தரவும்.***

## நாமகரணத்துவம் கண்டனம் செய்யப்படுகின்றது

1. ***பிரிவினைகளுக்குக் காரணமானவர்களை எப்படி நடத்த வேண்டும் (ரோமர் 16:17, 18)?***
2. ***பிரிவினைகளைப் பவுல் எவற்றுடன் அட்டவணைப்படுத்தினார்***

***(கலா. 5:19-21)?***

3. ***கொரிந்தியர்கள் எத்தனை அணிகளாகப் பிரிந்திருந்தார்கள் (1 கொரி. 1:11, 13)?***

   ***அவர்களின் நிலை பற்றிப் பவுல் கூறியது என்ன (1 கொரி. 3:1-4)?***

4. ***பிரிவினைவாதம் பற்றிப் புதிய ஏற்பாட்டில் கூறப்படுவது என்ன?***

   *"(மதப்) பிரிவு" என்ற வார்த்தையானது hairesis என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது, இது ஒன்பது முறை (புதிய ஏற்பாட்டில்) பயன்படுத்தப்படுகின்றது. இது ஒருமுறை கூட நல்ல கருத்தில் பயன்படுத்தப்படுவதில்லை. பின்வரும் வசனக் குறிப்புகளை வாசிக்கவும்: அப். 5:17; 15:5; 24:5, 14; 26:5; 28:22; 1 கொரி. 11:19; கலா. 5:20; 2 பேது. 2:1.*

   *அ. இது* "Sect" *(பிரிவு),* "faction" *(வெறுப்படைந்த குழு),*"heresies" *(மத எதிர்ப்புக் குழுக்கள்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

   *ஆ. பவுல் (மதப்) பிரிவினையாளராய் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பொழுது என்ன கூறினார் (அப். 24:14)?*

   *இ. இந்தப் பிரிவினர் அப்போஸ்தலர்களை எவ்வாறு நடத்தினர் (அப். 5:17, 18, 40)?*